# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் பொங்கல் திருவிழா!

## ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசு பொருட்கள் வழங்கும் தொடர் விழா!

### மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!



கழகத் தலைவர் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிடப் பொங்கல் – சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்! தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவையொட்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கழகத்தின் சார்பில் ஒன்றிய,நகர,பேரூர்கழகங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசு பொருட்களை வழங்கும் நிகழ்ச்சி. கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படிகீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

| வ. எ. | ஒன்றியம் / நகரம் / பேரூர் | தேதி | போட்டியின் பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | மீஞ்சூர் வடக்குஒன்றியம் மு.முரளிதரன் | 03-01-2026 | கிரிக்கெட் | அகரம் |
| 2 | | 04-01-2026 | ஓட்டப்பந்தயம், கிரிக்கெட் | பெரியகரும்பூர் |
| 3 | | 05-01-2026 | வாலிபால் | பனப்பாக்கம் |
| 4 | | 06-01-2026 | கோ-கோ, கிரிக்கெட் | மெதூர் |
| 5 | | 07-01-2026 | கபடி | கள்ளூர் |
| 6 | | 08-01-2026 | மிதிவண்டிப் போட்டி, கிரிக்கெட் | பூங்குளம் |
| 7 | | 09-01-2026 | கேரம் | சேலியம் பேடு |
| 8 | மீஞ்சூர் மேற்கு ஒன்றியம் ஆ.ராஜா, | 04-01-2026 | கபடி | சிறுவாக்கம் |
| 9 | | 05-01-2026 | கால்பந்தாட்டம் | நெய்தவாயல் |
| 10 | | 06-01-2026 | கேரம் | வன்னிப்பாக்கம் |
| 11 | | 06-01-2026 | கோலப்போட்டி | தடப்பெரும்பாக்கம் |
| 12 | | 07-01-2026 | வாலிபால் | நாலூர் |
| 13 | | 08-01-2026 | கிரிக்கெட் | கொடூர் |
| 14 | மீஞ்சூர் கிழக்குஒன்றியம் ஏ.ஆர்.இ.உதயசூரியன் | 06-01-2026 | கபடி | கொண்டைக்கரை |
| 15 | | 07-01-2026 | வாலிபால் | நந்தியம்பாக்கம் |
| 16 | | 08-01-2026 | கிரிக்கெட் | காட்டுப்பள்ளி |
| 17 | | 09-01-2026 | கோலபோட்டி | அத்திப்பட்டு |
| 18 | மீஞ்சூர் பேரூர் க.சு.தமிழ் உதயன் | 04-01-2026 | கோலபோட்டி | பாலாஜி நகர் |
| 19 | | 08-01-2026 | வாலிபால் | கல்யாணசுந்தரம் தெரு |
| 20 | | 09-01-2026 | இறகுப்பந்து | எடப்பாளையம் முரளி நகர் |
| 21 | பொன்னேரி நகரம் ஜி.ரவிக்குமார், | 04-01-2026 | கால்பந்தாட்டம் | சின்னக்காவணம் |
| 22 | | 05-01-2026 | கிரிக்கெட் | சின்னக்காவணம் |
| 23 | | 06-01-2026 | வாலிபால் | குன்னமஞ்சேரி |
| 24 | | 07-01-2026 | கேரம் | பெரியகாவணம் |
| 25 | | 08-01-2026 | இறகுப்பந்து | N.G.O நகர் |
| 26 | | 09-01-2026 | சதுரங்கம் | பாலாஜி நகர் |
| 27 | சோழவரம் மேற்குஒன்றியம் வே.ஆனந்த் குமார் | 04-01-2026 | கிரிக்கெட் | சின்னம்பேடு, |
| 28 | | 04-01-2026 | வாலிபால் | மல்லியங்குப்பம் |
| 29 | | 06-01-2026 | ஓட்டப்பந்தயம் | நத்தம் |
| 30 | | 07-01-2026 | கால்பந்தாட்டம் | ஞாயிறு |
| 31 | | 09-01-2026 | கோலபோட்டி | பஞ்செட்டி |
| 32 | சோழவரம் வடக்குஒன்றியம் ந.செல்வசேகரன் | 03-01-2026 | கபடி கிரிக்கெட் | வெள்ளிவாயல், விச்சூர் |
| 33 | | 04-01-2026 | கால்பந்தாட்டம், கிரிக்கெட், சிலம்பம் | வழுதிகைமேடு |
| 34 | | 05-01-2026 | வாலிபால் | நெடுவரம்பாக்கம், சீமாவரம் |
| 35 | | 06-01-2026 | கால்பந்தாட்டம், கிரிக்கெட் | ஆண்டார்குப்பம் |
| 36 | | 07-01-2026 | கோலபோட்டி | போந்தவாக்கம், திருநிலை |
| 37 | | 08-01-2026 | மிதிவண்டிப் போட்டி ஓட்டப்பந்தயம் | பெரியமுல்லைவாயல்,வடக்கு நல்லூர் |
| 38 | | 09-01-2026 | கோலபோட்டி | மாதவரம்,ஆமூர் |
| 39 | ஆரணி பேரூர் பி.முத்து | 04-01-2026 | கிரிக்கெட் | சுப்பிரமணி நகர் |
| 40 | | 06-01-2026 | சதுரங்கம் | S.P கோயில் தெரு |
| 41 | | 07-01-2026 | கேரம் | பெருமாள் குப்பம் |
| 42 | கும்மிடிப்பூண்டி மேற்குஒன்றியம் மு.மணிபாலன் | 04-01-2026 | வாலிபால் | பூவலை |
| 43 | | 05-01-2026 | பூபந்து | ஆரம்பாக்கம் |
| 44 | | 07-01-2026 | ஓட்டப்பந்தயம் | பூப்பந்து |
| 45 | கும்மிடிப்பூண்டிதெற்கு ஒன்றியம் கி.வேணு ஆனந்த் | 06-01-2026 | வாலிபால் | பெருவாயல் |
| 46 | | 07-01-2026 | கிரிக்கெட் | தண்டலச்சேரி |
| 47 | | 08-01-2026 | கிரிக்கெட் | தண்டலச்சேரி |
| 48 | | 09-01-2026 | கிரிக்கெட் | புதுகும்மிடிப்பூண்டி |
| 49 | | 09-01-2026 | கோ-கோ | புதுகும்மிடிப்பூண்டி |
| 50 | கும்மிடிப்பூண்டிகிழக்கு ஒன்றியம் ந.பரிமளம் | 06-01-2026 | கபடி | சுண்ணாம்புக்குளம் |
| 51 | | 09-01-2026 | கோல போட்டி | பெத்திகுப்பம் |
| 52 | கும்மிடிப்பூண்டிபேரூர் இரா.அறிவழகன் | 04-01-2026 | கபடி | மேட்டுத்தெரு |
| 53 | | 07-01-2026 | ஓட்டப்பந்தயம், கோ-கோ மிதிவண்டிப் போட்டி | ஜெய்ஹிந்த்நகர் |
| 54 | | 08-01-2026 | வாலிபால் | மேட்டுகாலனி |
| 55 | | 09-01-2026 | கால்பந்தாட்டம் | சாய்பாபா நகர் |
| 56 | எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் ஆ.சத்தியவேலு | 04-01-2026 | கோல போட்டி | குமரப்பேட்டை |
| 57 | | 05-01-2026 | கோ-கோ | வடமதுரை |
| 58 | | 08-01-2026 | கோல போட்டி ஓட்டப்பந்தயம் | பாலவாக்கம் |
| 59 | | 09-01-2026 | ஓட்டப்பந்தயம் | லச்சிவாக்கம் |
| 60 | | 09-01-2026 | வாலிபால் | பெரியபாளையம் |
| 61 | எல்லாபுரம் தெற்குஒன்றியம் ஜெ.மூர்த்தி | 04-01-2026 | வாலிபால் | திருகண்டலம் |
| 62 | | 05-01-2026 | கிரிக்கெட் | கன்னிகைபேர் |
| 63 | | 06-01-2026 | கபடி | பூரிவாக்கம் |
| 64 | | 07-01-2026 | ஓட்டப்பந்தயம் | அக்கரப்பாளையம் |
| 65 | | 08-01-2026 | மிதிவண்டிப் போட்டி | அழிஞ்சிவாக்கம் |
| 66 | | 09-01-2026 | கோ-கோ | கிளாம்பாக்கம் |
| 67 | | 09-01-2026 | கால்பந்தாட்டம் | கோட்டைக்குப்பம் |
| 68 | பூண்டி கிழக்கு ஒன்றியம் டி.கே.சந்திர சேகர் | 04-01-2026 | கிரிக்கெட் | மெய்யூர் |
| 69 | | 04-01-2026 | வாலிபால் | கச்சூர் |
| 70 | | 06-01-2026 | கிரிக்கெட் | நந்திமங்கலம் |
| 71 | | 07-01-2026 | வாலிபால் | கலவை |
| 72 | | 08-01-2026 | வாலிபால் | கரக்கம்பாக்கம் |
| 73 | | 09-01-2026 | கிரிக்கெட் | கலவை |
| 74 | பூண்டி வடக்குஒன்றியம் ஜான் பொன்னுசாமி | 03-01-2026 | வாலிபால் | நெல்வாய், அம்மம் பாக்கம் |
| 75 | | 04-01-2026 | கிரிக்கெட் | பென்னலூர்பேட்டை ,கூனிப்பாளையம் |
| 76 | | 05-01-2026 | கபடி, ஓட்டப்பந்தயம் | திம்மபூபாலபுரம் வெள்ளாத்துகோட்டை |
| 77 | | 06-01-2026 | ஓட்டப்பந்தயம், கோல போட்டி | நம்பாக்கம்,அரியத்துர் |
| 78 | | 07-01-2026 | ஓட்டப்பந்தயம், மிதிவண்டிப் போட்டி | ஆட்டரம்பாக்கம் ,ராமநாதபுரம் |
| 79 | | 08-01-2026 | கோ-கோ, கோல போட்டி | பெருஞ்சேரி, ராமலிங்காபுரம் |
| 80 | ஊத்துக்கோட்டை பேரூர் அபிராமி குமரவேல் | 04-01-2026 | பூப்பந்து | கோதண்டராமன் பள்ளி வளாகம் |
| 81 | | 05-01-2026 | கோகோ | அங்காளம்மன் தெரு |
| 82 | | 07-01-2026 | கைபந்துபோட்டி | டாக்டர் அம்பேத்கர் நகர் |
| 83 | | 09-01-2026 | கிரிக்கெட் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானம் |

மேற்கண்ட நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் மாவட்ட நிர்வாகிகள்: கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன். எம்.எல்.இரவி, எஸ்.ரமேஷ். தொகுதி பார்வையாளர்: சுரேஷ்செல்வராஜ், கவிகணேசன், மாநில நிர்வாகிகள்: சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ். எம்.ஜி.ராபட்ராஜ்துரை, பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி. வெங்கடாசலபதி. டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன். ஏ.வி.ராமமூர்த்தி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் இணைந்து எழுச்சியோடு நடத்தி “திராவிடப் பொங்கல்” கொண்டாட்டங்களை வெற்றியடைச் செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

குறிப்பாக ;- ஜனவரி 14-15 திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முழுவதும் ஊராட்சிகள் வார்டுகளில் மகளிரைத் திரட்டி சாதி, மத, ஏற்றத்தாழ்வு பேதமற்ற “திராவிடப் பொங்கல்” வைத்து கொண்டாடப்பட வேண்டும். அனைத்து வீடுகள் முன்பும் ‘சமத்துவம் பொங்கட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ என எழுதி ‘திராவிடப் பொங்கல்’ விழாவை கொண்டாட வேண்டும்

**வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்**

பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட மூவரசம்பட்டு ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை கட்டிடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தார். அருகில் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 5-ஆம் தேதி நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும்

## கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!



காஞ்சிபுரம், ஜன.3-

10 லட்சம் கல்லூரி மாணவ- மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்க 5--ஆம் தேதி பிற்பகல் நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் அன்று பிற்பகல் 3.00 மணியளவில் அணி திரண்டு வந்து மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக, முதல் கட்டமாக 10 லட்சம் கல்லூரி மாணவ - மாணவியர்களுக்கு AI பயன்பாட்டுடன் கூடிய, விலையில்லா மடிக்கணினி வழங்கும் மாபெரும் திட்டம் தொடக்க விழா ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் ஜனவரி 5-ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு தொடங்கி மாலை 6.00 மணிக்கு நிறைவடைகிறது. முதல் அமைச்சர் அவர்கள் நேரில் வருகை தந்து இம்மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இம்மாபெரும் தொடக்க விழாவில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில், 5.1.2026 பிற்பகல் 3.00 மணியளவில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேளதாளம் - பேண்டு வாத்தியம் முழங்கபிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ண கொடியையேந்தி 5 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கெல்லாம் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இம்மாபெரும் வரவேற்பில் பங்கேற்பது “நமது கடமை - நமது உரிமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு கழகத்தினர் அனைவரும் அலைகடலென ஆர்ப்பரித்து வாரீர் ! வாரீர்! ! என்று இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## திருவரங்குளத்தில் மாபெரும் கபடிப் போட்டி! அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைக்கிறார்!

புதுக்கோட்டை, ஜன. 3-

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் நடத்தப்படும் மாபெரும் ஒரு ஊர் மின் ஒளி கபடி போட்டி ஜனவரி 3 ,4 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி அளவில் ஸ்ரீ பிடாரியம்மன் கோவில் திடலில் நடைபெற உள்ளது.

விழாவிற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் போட்டிகளை துவக்கி வைக்கிறார். முன்னதாக அனைவரையும் திருவரங்குளம் தெற்குஒன்றிய திமுக செயலாளர் அரு.வடிவேல் வரவேற்க போட்டி ஏற்பாடுகளை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பால பிரபாகரன், பி. அஜய் ஒருங்கிணைப்பில் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இளைஞர் அணி மணிகண்டன் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### முன்னாள் கழக தலைமை நிலையச் செயலாளர்

## கு.க.செல்வம் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்! நல உதவிகள்!

### மயிலை த.வேலு, ஜெ.கருணாநிதி, பூச்சி எஸ்.முருகன், டாக்டர் சுபேர்கான் பங்கேற்பு!



சென்னை ஜன. 3-

முன்னாள் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் கழக தலைமை நிலைய செயலாளருமான கு.க.செல்வம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (.03.01.2026 சனிக்கிழமை ) 5/29 தெற்கு சிவன் கோயில் தெரு கோடம்பாக்கம் அன்னை உள்ளம் முதியோர் இல்லத்தில் மதியம் 12 மணியளவில் அறுசுவை உணவு மற்றும் மகளிருக்கு புடவை வழங்கப்படுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ,தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, வீட்டு வசதி வாரிய தலைவர்,தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ். முருகன், மாநில சிறுபான்மையர் நல உரிமைபிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இதில் பகுதி செயலாளர் கே.ஏழுமலை.எம்.சி மாவட்ட துணை செயலாளர் கோடம்பாக்கம் மு. சத்யா,தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி, வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி, வட்ட செயலாளர் நா.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா,கார்த்திகா பாஸ்கர். எம்.சி, டி.கமல்,பாஸ்கர் எம்.சி,

அண்ணா பொதுநல மன்ற நிர்வாகிகள் எஸ். கண்ணதாசன்,டி. மணிமாறன்,புதூர் செல்வம்,எஸ். அசோக்,டிரைவர் ஆனந்த், டிரைவர் உமாபதி, தாமஸ், தில்லை.பாஸ்கர், விருகை. கிருஷ்ணன், பழக்கடை மூர்த்தி, காலனி பி.வேலு, பில்லா ஜான், அப்பாராவ்,என். அப்துல் ரகுமான், சண்முகம், உதயகுமார்,எம். ஜெயக்குமார், பா.சங்கர், ஜெ.சரவணன், ஜெ.சந்தோஷ் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் எஸ். கே.நசீர் செய்துள்ளார்.

ஐ.ஜான்கென்னடி,கே. ஜலந்தர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் தொமூர் ஊராட்சி அரசுப் பள்ளியில் உங்களுடன் நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு பல்வேறு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் டி.மோதிலால், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், நிர்வாகிகள் ப.சிட்டிபாபு, பொன்.பாண்டியன், சித்ரா ரமேஷ் ஆனந்த், நடராஜ் காஞ்சிபாடி சரவணன், சதீஷ் லிங்கேஷ், கௌதம் உள்பட மருத்துவத் துறை அதிகாரிகள், மருத்துவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.